DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 392/2025
Miscellaneous :
Sessions : PW 2
Deposition of Witness for
**எதிரி ஆஜர்**

| | |
|---|---|
| Name | கைலாசம் |
| Father / Husband Name | துலுக்கானம் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **16.04.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது ராமாபுரத்தில் வசித்து ஆடு மேய்க்க செல்வேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். **(பார்வை மகசரில் உள்ள முதலாவது கையொப்பம் அசாஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** தேதி ஞாபகம் இல்லை. சுமார் 5 மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் ஆடு மேய்க்க ராமாபுரம் பழனியம்மாள் கோவில் அருகே இ ருந்தபோது இரண்டு போலிசார் என்னை மடக்கி கையொப்பம் வாங்கினார்கள். வழக்கு குறித்து வேறு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதப்பட்டு குறுக்கு விசாரணைக்கு அனுமதி கோரப்பட்டது அனுமதி அளிக்கப்பட்டது)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

2. கடந்த 01.08.2016 தேதி காலை சுமார் 11.00 மணியளவில் நான் ராமாபுரம் பழனியம்மன் கோவில் அருகே நின்று கொண்டிருந்தபோது மேல்மருவத்தூர் போலிசார் மேற்படி 31.07.2016 ம் தேதி ஆஜர் எதிரிக்கு சொந்தமான இருசக்கர வாகனத்தில் சென்ற தங்கம்மாள் என்பவருக்கு ஏற்பட்ட விபத்து சம்மந்தமாக சம்பவயிடத்தை பார்வையிட்டு ஹரிகரன் மற்றும் எனது முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்ததற்கு தான் சாட்சி கையொப்பம் செய்ததாக போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறுவிசாரணை இல்லை**